# அரையாண்டுப் பொதுத் தேர்வு 2024 – 2025

## ஒன்பதாம் வகுப்பு

**நேரம் ; 3.00 மணி** **தமிழ்** **மதிப்பெண்கள் ; 100**

பகுதி – அ பிரிவு-1

**I. சரியான விடையைத் தேர்ங்கதடுத்து எழுதுக** 15 x 1 = 15

1. அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தாமணி அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு தருக.

அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

2. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?

அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி

3. ஐம்பெருங்குழு, எண்பேராயம்-சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்.

அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள் இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்

4. தமிழ்மொழியில் கிடைக்கப் பெற்ற பழமையான இலக்கண நூல்

அ) நன்னூல் ஆ) தண்டியலங்காரம் இ) தொல் காப்பியம் ஈ) யாப்பருங்கலகாரிகை

5. <u>பூவாது</u> காய்க்கும், <u>மலர்க்கை</u> -அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது ?

அ) பெயரெச்சம், உவமைத்தொகை ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்

இ) வினையெச்சம், உவமை ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை

6. பொதுவர்கள் பொலிஉறப் போர் அடித்திடும் நிலப்பகுதி. ................................

அ) குறிஞ்சி ஆ) நெய்தல் இ) முல்லை ஈ) பாலை

7. சொல்லும் பொருளும் பொருந்தியுள்ளது எது?

அ) வருக்கை – இருக்கை ஆ) புள் –தாவரம் இ) அள்ளல் –சேறு (ஈ) மடிவு - தொடக்கம்

8. சீவக சிந்தாமணியை இயற்றியவர் யார் ?

அ) இளங்கோவடிகள் ஆ) சீத்தலைச் சாத்தனார் இ) திருத்தக்கத்தேவர் ஈ) திருவள்ளுவர்

9. திருநாதர் குன்றில் ஒரு பாறையில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளவை ................................

அ) விலங்கு உருவங்கள் ஆ) தீர்த்தங்கரர் உருவங்கள்

இ) தெய்வ உருவங்கள் ஈ) நாட்டியம் ஆடும் பாவை உருவங்கள்

10. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?

அ) தேசியத் திறனறித் தேர்வு ஆ) ஊரகத் திறனறித் தேர்வு

இ) தேசியத் திறனறி, கல்வி உதவித் தொகைத்தேர்வு ஈ) மூன்றும் சரி

11. தமிழ்விடு தூது ------------------------ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது

அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

**பிரிவு - 2**

**பாடலைப் படித்து பொருள் உணர்ந்து விடையளிக்க**

பூவாது காய்க்கும் மரம் உள; நன்று அறிவார்.
மூவாது மூத்தவர், நூல்வல்லார்; தாவா
விதையாமை நாறுவ வித்து உள; மேதைக்கு
உரையாமை செல்லும் உணர்வு.

12. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?

அ) தமிழ்விடுதூது ஆ) சிறுபஞ்சமூலம் இ) பெரிய புராணம் ஈ) புறநானூறு

13. இப்பாடலை இயற்றியவர் யார்?

அ) காரியாசான் ஆ) புலவர் குழந்தை இ) ஔவையார் ஈ) குடபுலவியனார்

14 இப்பாடலில் இடம்பெற்ற எதுகைச்சொற்கள்எவை ?

அ) பூவாது - மூவாது ஆ) அறிவார் – உல்லார் இ)விதையாமை – உரையாமை ஈ) மூவாது - மூத்தவர்

15. அறிவார் வல்லார் - இலக்கணக்குறிப்புத் தருக?

அ) வினைத்தொகை ஆ) வினையாலணையும் பெயர் இ) வினையெச்சம் ஈ) பெயரெச்சம்

**பகுதி - ஆ**

**பிரிவு-1**

**எவையேனும் நாலாகு வினாக்களுக்கு விடையளி**

**21-வது வினாவிற்குக் கட்டாயமாக ஊடயளிக்கவும்** **4x 2 = 8**

16. நீங்கள் பேசும் மொழி எந்த இந்தியமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?

17. விடைக்கேற்ற வினாத்தொடர் அமைக்க.

அ) திருக்குறளை திருவள்ளுவர் இயற்றினார்.

ஆ) பல்லவர் காலச் சிற்பங்கள் மாமல்லபுரத்தில் உள்ளன.

18. *கூவல்* என்று அழைக்கப்படுவது எது ?

19. கூட்டுப் புழுவை எடுத்துக்காட்டி கவிஞர் உணர்த்தும் கருத்துகளை எழுதுக.

20. நீங்கள் மிகவும் விரும்பிப் படித்த நூல்கள் யாவை?

21 "மிகுதியான்" எனத்தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு - 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5 x 2 = 10**

22. வீணையோடு வந்தாள், கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக.

23. தொடரைப் பழமொழிகொண்டு நிறைவு செய்க.

அ) சித்திரமும் கைப்பழக்கம் ------------------------------ ----------------------------

ஆ) கற்றோர்க்குச் சென்ற ------------------------------ -----------------------------

24. பிழை நீக்கி எழுதுக.

அ) நல்ல தமிழுக்கு எழுதுவோம் ஆ) குழலியும் பாடத் தெரியும்

25. சொற்களை இணைத்துத் தொடர்களை விரிவுப்படுத்துக.

அ) மழை பெய்தது ஆ) வானவில்லைப் பார்த்தேன்.

26. விடையைத் தமிழ் எண்களில் எழுதுக.

அ) பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆ) சிற்றிலக்கிய வகைகள்

27. கலைச்சொல் தருக.

அ) Water management ஆ) Download

28 அகராதியில் காண்க.

அ) நசை ஆ) கான்

## பகுதி - இ

### பிரிவு-1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 2 × 3 = 6

29. குறிப்பு வரைக - டோக்கியோ கேடட்ஸ்

30 பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணையவழிச் சேவைகளை எழுதுக.

31. உரைப் பத்தியைப் படித்துப் பதில் தருக.

இருபதாம் நூற்றாண்டில் இந்திய வானியல் துறையில் தமிழர்களின் பங்கு மகத்தானது அப்துல் கலாம், மயில்சாமி அண்ணாதுரை, வளர்மதி போன்றோர் வரிசையில் மற்றோர் வைரம், தமிழ் நாட்டைச் சேர்ந்த அறிவியலாளர் சிவன். இஸ்ரோவின் ஒன்பதாவது தலைவர் இந்தப் பதவியை ஏற்றிருக்கும் முதல் தமிழர் ஆவார்

அ) எத்துறையில் தமிழர்கள் சிறந்து விளங்குகின்றனர் ?

ஆ) இந்திய வானியல் துறையில் பங்காற்றிய தமிழர்கள் யாவர்?

இ) இஸ்ரோவின் தலைவராக விளங்கிய தமிழர் யார்?

### பிரிவு-2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க** 2 x 3 = 6

32. "புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய் " - உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.

33 அறிவையும் உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்?

34. "காடெல்லாம் "- எனத்தொடங்கும் மனப்பாடப்பாடலை அடி பிறழாமல் எழுதுக.

### பிரிவு-3

**வையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க** 2 x 3 = 6

35. வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதுவதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக

36. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை - இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக,

37. இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்
துன்பத்துள் துன்பங் கெடின் - இக்குறளுக்கு அலகிட்டு வாய்பாடு காண்க.

## பகுதி - ஈ

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை யளிக்கவும்** 5 x 5 = 25

38. நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க (அல்லது)

சேர, சோழ, பாண்டிய நாட்டு வளங்களை முத்தொள்ளாயிரம் வழி விளக்குக.

39. உங்களின் நண்பர், பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின், "கால் முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக. (அல்லது)

உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ்-தமிழ்- ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

40. எனது பயணம் என்னும் தலைப்பில் உங்களது பயண அனுபவங்களை வருணித்து எழுதுக. (அல்லது)

அன்பின் வழி என்னும் தலைப்பில் கவிதை படைக்க.

41. எனக்குப் பிடித்தவை /என் பொறுப்புகள் - என நீங்கள் குறிப்பிடுவன எவை? (அல்லது)

மொழிபெயர்க்கவும்:

1. Linguistics 2. Literature 3. Philologist 4. Polyglot 5. Phonetics

42. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



## பகுதி - உ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** 3 x 8=24

43. ஏறு தழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

(அல்லது )

தூது அனுப்பத் தமிழே சிறந்தது – தமிழ் விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

44. நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை? (அல்லது)

தண்ணீர் கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

45. பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சி செய்திகளைத் திரட்டி தொகுப்புரை எழுதுக.

( அல்லது )

போதைப்பொருள் ஒழிப்பு - கட்டுரை வரைக

முன்னுரை - போதை என்னும் அழிவுப்பாதை - போதைப் பொருட்களால் ஏற்படும் தீமைகள் - தடுக்கும் வழிமுறைகள்- அரசின் கடமைகள் - போதைப் பொருள் விழிப்புணர்வு முழக்கத் தொடர்கள்- போதை இல்லா உலகு - முடிவுரை.